1970 எப்ரல் 2]

மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்

***654 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில், 1969 ஜூன் திங்கள், முதல் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் கொண்டு வரப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: (அ) & (இ) பேரவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தத் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் மதுரை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளுக்கு இப்போது விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது? எந்தெந்தப் பகுதிகள் விஸ்தரிக்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தொழிலாளர்களுக்கு 1956-ம் ஆண்டு முதல் மதுரை, மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. 3–6–1969 முதல் தொழிலாளர் குடும்பங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு அவர்களுக்கும் அந்த மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சுமார் 29,000 தொழிலாளர் குடும்பங்கள் மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பயன்பட்டு வருகின்றனர். அதில் அரசு மருந்தகங்கள் திருநகர், பொன்னகரம், பழங்காநத்தம், முனிச்சாலை ரோடு, பாலை மணி நகரம், தல்லா குளம் போன்ற இடங்களில் மருந்தகங்கள் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

(2) ஒற்றி வைப்புத் தீர்மானம்.

கன்னியாகுமரி கன்யா ஸ்பின்னிங் மில் தொழிலாளர் வேலை நிறுத்தமும், தொழிற்சங்க செயலாளர் உண்ணாவிரதமும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எ. பாலசுப்பிரமணியம், திரு. சி. கோவிந்தராஜன் ஆகிய மூன்று உறுப்பினர்களும்

* 107-108-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

' The dangerous condition of Thiru M. M. Ali, Secretary of the Kanya Spinning Mill Workers Union in Kanyakumari district on the 5th day of the hunger strike undertaken by him demanding